Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 70

வெள்ளிக்கிழமை
04 பெப்ரவரி 2022

தை 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=



இந்திய மீனவர்களின் அத்துமீறலை எதிர்த்து -

## படகுக்குத் தீமூட்டிய மீனவர் உயிர்மாய்க்கவும் முயற்சி!

பொலிகண்டியில் நேற்றுப் பரபரப்பு

யாழ்ப்பாணம்,பெப்.04
இந்திய மீனவர்களின் அத்துமீற லுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகை 05 ➤

### ஐ.நா. உறுப்புநாடுகளுக்கு கூட்டமைப்பு கடிதம்

# தமிழர்கள் மீதான அடக்குமுறை தொடர்கிறது இலங்கையில்!

*தீர்வை வழங்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு சம்பந்தன் கோரிக்கை*



திருகோணமலை, பெப்ரவரி 04

பொறுப்புக் கூறல் கடப்பாட்டில் இருந்து இலங்கை அரசாங்கம் தவறியுள்ளது. கைது செய்தல், அரசியல் கைதிகள் விவகாரம், நில அபகரிப்பு என்னும் பல வடிவங்களில் தமிழர்கள் மீதான அடக்குமுறை இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. 14 ➤

## எழுத்தில் உறுதிமொழி தரவே முடியாது!

*அடம்பிடிக்கிறார் அமைச்சர் டக்ளஸ்*

யாழ்ப்பாணம், பெப்.04
இந்திய மீனவர்களின் அத்துமீற லைக் கண்டித்தும், வத்திராயன் 05 ➤

## "டேய், குறுக்க கதைக்காதை!

மீனவர்களைத் திட்டிய டக்ளஸ்

யாழ்ப்பாணம், பெப்.04
மீனவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் திண 05 ➤

## முள்ளிவாய்க்காலில் இன்று கறுப்புநாள்!

*அணிதிரளுமாறு மக்களுக்கு அழைப்பு*

முல்லைத்தீவு, பெப்.04
தமிழர்களுக்கு இன்னமும் நீதியும், சுதந்திரமும் மறுக் கப்பட்டே வருகின்றது என்பதை வெளிப்படுத்தும் வகை 14 ➤

## தேசிய சுதந்திரதின நிகழ்வைப் புறக்கணிக்க பேராயர் முடிவு!

கொழும்பு, பெப்.04
இன்று நடைபெறவுள்ள தேசிய சுதந் திர தின நிகழ்வைப் புறக்கணிப்பதற்கு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தீர்மானித்துள்ளார் என்று கத்தோலிக்க சபையின் ஊட கப் பேச்சாளர் அருட் தந்தை சிறில் காமினி 14 ➤

யாழில் மீனவர்கள் போராட்டம்

## கச்சேரி, ஆளுநர் அலுவலகம் முற்றுகையால் முடக்கம்!

யாழ்ப்பாணம், பெப்.04
இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலைக் கண்டித்தும், கட 05 ➤

## நேற்றும் மின்வெட்டு!

கொழும்பு, பெப்.04
நாட்டின் பல பாகங்களில் நேற்றும் எவ்வித முன்னறிவித்தலுமின்றி, திடீரென மின்சா ரம் தடைப்பட்டதால் 14 ➤

## போராட்டம் தொடரும் மீனவர்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 4
வடமராட்சி மீனவர்களின் போராட்டத் துக்கு நீதிமன்றம் தடையுத்தரவு வழங் கியுள்ள நிலையில், பொதுமக்களுக்கு இடையூறில்லாமல் வீதிமறிப்பைக் கைவிட்டு கவனவீர்ப்புப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று மீனவர்கள் அறிவித்துள்ளனர். இதேவேளை, இலங்கை யின் சுதந்திர தினமான 05 ➤

மீனவர்களின் போராட்டத்துக்கு

## நீதிமன்றம் தடை!

யாழ்ப்பாணம், பெப்.04
இந்திய மீனவர்க ளின் அத்துமீற 05 ➤

## மீனவர்களை மோதவிட்டு வேடிக்கை பார்க்கிறது அரசு!


சாடுகிறார் சஜித்

கொழும்பு, பெப்.04
"இலங்கை - இந்திய மீனவர்களை மோதவிட்டு வேடிக்கை பார்க்கின் 05 ➤

## மாவைக்கு கொரோனா

யாழ்ப்பாணம், பெப். 4
தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரு 14 ➤

இலங்கையில் அதிகூடிய இணைய வேக சாதனையை படைத்துள்ள எயார்டெல், 5G பரிசோதனையை ஆரம்பிக்கிறது




airtel
THE 5G READY NETWORK

தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில்–

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கையெழுத்து வேட்டை!

- முல்லையில் நேற்று ஆரம்பம்
- உரிமைகள் மறுதலிப்பை எதிர்த்து குருந்தூர்மலையில் இன்று தடைமீறி உள்நுழைவுப் போராட்டம்

முல்லைத்தீவு, பெப்.04
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு இலங்கை அரசுக்கு சர்வ தேசம் அழுத்தம் கொடுக்க வேண்டுமெனக் கோரி மாபெரும் கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கை ஒன்றை தமிழரசுக் கட்சி நேற்று முல்லைத்தீவில் ஆரம்பித்துள்ளது. அத்துடன் இலங்கையின் சுதந்திரதினமான இன்று காலை 6 மணிக்கு 14 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடகொரியாவில் இருந்து

# ஆயுதக் கொள்வனவுக்கு எதற்காக கறுப்புப்பணம்?

## ஐக்கிய தேசியக்கட்சி கேள்வி



**கொழும்பு, பெப். 4**
**'போர்க்காலத்தில் இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதற்கு சீனா, ரஷ்யா மற்றும் இஸ்ரேல் முன்வந்திருந்த நிலையில், எதற்காக வடகொரியா தேர்வு செய்யப்பட்டது என்பது குறித்தும், ஆயுதக் கொள்வனவுக்காக ஏன் கறுப்புப் பணம் பயன்படுத்தப்பட்டது என்பது தொடர்பிலும் நிதி அமைச்சர் நாடாளுமன்றத்துக்கு தெளிவுபடுத்தவேண்டும்' இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளரும், முன்னாள் அமைச்சருமான வஜீர அபேவர்தன வலியுறுத்தினார்.**

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

'போர்க் காலத்தில் ஆயுதம் கொள்வனவு செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவால் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பானது தேசிய ரீதியில் மட்டுமல்ல சர்வதேசத் தளத்திலும் தாக்கத்தை செலுத்தக்கூடிய விடயமாக அமைந்துள்ளது.

போரின்போது கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி வடகொரியாவில் இருந்து ஆயுதம் கொள்வனவு செய்யப்பட்டது என நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் தற்போதைய நிதி நிலைமை குறித்து சர்வதேசத்துக்கு நம்பிக்கை இல்லாத நிலையில், நிதி அமைச்சரின் இந்த அறிவிப்பானது, சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெறுவதில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். எனவே, எம்மால் எழுப்பப்படும் 4 கேள்விகளுக்கு நாடாளுமன்றத்தில் அவர் உரிய விளக்கத்தை விரைவில் வழங்க வேண்டும்.

போர் நடவடிக்கைக்கு நிதி தேவையெனில் நாடாளுமன்றம் ஊடாக பெற்றிருக்கலாம். நிதி பெறப்பட்ட வழிமுறைகள் மற்றும் இடங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தல் அவசியம். எனவே ஆயுதக் கொள்வனவுக்கு எதற்காக கறுப்புப் பணம் பயன்படுத்தப்பட்டது? சீனா, ரஷ்யா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் ஆயுதம் வழங்குவதற்கான ஒத்துழைப்பை வழங்கிவந்த நிலையில், எதற்காக வடகொரியா தேர்வு செய்யப்பட்டது? வடகொரியாவில் இருந்து வாங்கப்பட்ட ஆயுதங்கள் எவை? அவை உரியவகையில் தரவுக் கட்டமைப்பில் பதிவு செய்யப்பட்டனவா? என்றும் பஸில் தெளிவுபடுத்த வேண்டும்' - என்றார். (அ-44)



## சுதந்திர தின நிகழ்வுக்கு வவுனியாவில் ஏற்பாடு

வவுனியா, பெப். 4
இலங்கையின் 74 ஆவது சுதந்திரதின நிகழ்வை முன்னிட்டு, வவுனியா நகரசபை மைதானத்தில் சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. விருந்தினர்களுக்கான பந்தல் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட செயலகத்துடன் இணைந்து பிரதேச செயலகத்தினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் மாணவர்கள், முப்படையினர் ஆகியோரின் அணிவகுப்புக்கான ஒத்திகைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-4-18)



இலங்கை திறைசேரியுடன் பெற்றோலியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான, 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் ஒப்பந்தம், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றும் இந்தியத் தூதுவர் முன்னிலையில் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது. (ம-4-இ)

வடகொரியாவிடம் ஆயுதக் கொள்வனவு

# பஸிலை அமெரிக்கா விசாரிக்கவேண்டும்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 4
கள்ளச் சந்தையில் டொலரை வாங்கி வடகொரியாவிடம் ஆயுதக் கொள்வனவு செய்த தமது நாட்டு பிரஜையான நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவை அமெரிக்கா விசாரணை செய்து உண்மையை தெளிவுபடுத்தவேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கறுப்புச் சந்தையில் டொலரை வாங்கி வடகொரியாவிடம் ஆயுதங்களை கொள்வனவு செய்ததாக இலங்கையின் நிதி அமைச்சரும் அமெரிக்க பிரஜையுமான பஸில் ராஜபக்ச கூறியிருப்பது தற்போது சர்ச்சையாகியுள்ளது.

தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டம் என்பது சுயநிர்ணய உரிமை, சுயாட்சி போன்றவற்றை மையமாகக் கொண்டு நடைபெற்றது. விடுதலைப் போராட்டம் என்பது பேச்சுமூலம் தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய விடயம். ஆனால் 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த அரசாங்கம் மூர்க்கத்தனமாகப் போரை முன்னெடுத்தமை எல்லோருக்கும் தெரிந்த விடயம். யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக பல கோடிகளை செலவிட்டு ஆயுதங்களை கொள்வனவு செய்தது.

முக்கியமாக வடகொரியாவில் இருந்து ஆயுதங்களை வேண்டியதாக தற்போது கூறுகின்றார்கள். அன்றைய பாதுகாப்புச் செயலர் மற்றும் இன்றைய நிதியமைச்சர் ஆகியோர் அமெரிக்க பிரஜைகளாக இருந்தவர்கள். அமெரிக்காவால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட நாட்டுடன் இவர்கள் கள்ளச்சந்தை மூலம் டொலரைக் கடத்தி, அங்கிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்தோம் என ஏற்றுக்கொள்கின்றனர். நிச்சயமாக அமெரிக்க அரசு பஸில் ராஜபக்சவை மாத்திரமன்றி அன்றைய காலகட்டத்தில் இலங்கையை வழிநடத்திய அனைவரையும் விசாரிக்கவேண்டும்.

கள்ளச் சந்தை ஊடாக வடகொரியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட ஆயுதங்கள் மனிதப் படுகொலைக்கும் மனித உரிமை மீறலுக்குமாக இலங்கை அரசாங்கத்தால் அப்போது பயன்படுத்தப்பட்டது என்பதுதான் முக்கியமான விடயம் - என்றார். (ம-20)

## குருதிக்கொடை முகாம்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட இயக்கச்சி 552 ஆம் காலாட்படையின் ஏற்பாட்டில், சுதந்திர தினத்தை முன்னிட்டு குருதிக்கொடை முகாம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. குருதிக்கொடையில், 55 காலாட்படை பிரிவின் இராணுவத் தளபதி பிரிகேடியர் எம்.கே.யு.பி குணரத்ன, இயக்கச்சி 552ஆம் காலாட்படை பிரிவின் இராணுவத் தளபதி பிரிகேடியர் ஆர்.பி.முனிபுரா, இராணுவத்தினர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-ரி1-113)

## சுதந்திரதினத்தை முன்னிட்டு மதுபானசாலைகள் மூடல்

கொழும்பு, பெப். 4
74ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு அனைத்து மதுபானசாலைகள் மற்றும் இறைச்சி விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிவித்தலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மயிலிட்டி - கட்டுவன் வீதியை திறக்கக் கோரி ஆர்ப்பாட்டம்



மயிலிட்டி - கட்டுவன் பிரதான வீதியைப் புனரமைத்துத் திறக்குமாறு கோரி, அந்தப் பிரதேச மக்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில், தெல்லிப்பழை பிரதேச செயலருக்கு மனு ஒன்றைக்கையளித்தனர்.

இடம்பெயர்ந்து 35 ஆண்டுகளின் பின்னர், தற்போது எமது சொந்த ஊரான மயிலிட்டியில் வசித்து வருகின்றோம். இந்த நிலையில் மயிலிட்டி - கட்டுவன் வீதி புனரமைக்கப்பட்டு வந்த நிலையில் 400 மீற்றர் தூரம் வரை தற்போது புனரமைக்கப்படாது உள்ளது. இது குறித்து பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் சுட்டிக்காட்டப்பட்டது.

தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், மல்லாகம், சுன்னாகம் போன்ற இடங்களுக்குச் செல்லும் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் அரச ஊழியர்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

வேறு வீதியால் மூன்று கிலோமீற்றர் தூரம் சுற்றியே பயணிக்க வேண்டியுள்ளது. எனவே குறித்த வீதியை உடனடியாக புனரமைத்து திறக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ம-4-23-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் இடமாற்றம் மாணவர்கள் எதிர்ப்பு

## அதிகாரியின் வாக்குறுதியால் போராட்டம் முடிவுக்கு வந்தது

**யாழ்ப்பாணம்,பெப்.4**

**வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரியர், இடமாற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

'கடந்த பல மாதங்கள் அசாதாரண சூழ்நிலை காரணமாக, பாடசாலை மூடப்பட்டிருந்தது. தற்போது ஓரளவு சுமுக நிலைக்கு வந்துள்ளது. இந்த நிலையில் ஆசிரியர் இடமாற்றத்தை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

எமது பாடசாலை ஆசிரியரை வேறு பாடசாலைக்கு மாற்றி, இன்னொரு ஆசிரியர் வாரத்தில் மூன்று நாளைக்கு மாத்திரம் எமது பாடசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் எமது பாடத்திட்டங்களைச் சரியான நேரத்தில் முடிக்கமுடியாது. எனவே உரிய அதிகாரிகள் எமக்குத் தீர்வைப் பெற்றுத் தர வேண்டும்' என்று மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.



சம்பவ இடத்துக்கு வருகை தந்த வலயக் கல்விப் பணிப்பாளர் அதிபர் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இடமாற்றப்பட்ட ஆசிரியர் ஏனைய இரு நாள்களும் கடமையில் ஈடுபடுவார் என்று தெரிவித்தார். அதற்கு மாணவர்களும் சம்மதம் தெரிவித்தனர். அதனையடுத்து போராட்டம் முடிவுக்கு வந்தது. (ம.4-27)

# சுதந்திர தினத்தன்று ரஞ்சன் விடுதலை?

## சஜித் நம்பிக்கை

கொழும்பு, பெப். 4

சுதந்திர தினத்தன்று ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்படுவார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நம்பிக்கை வெளியிட்டுள்ளார். சிறையில் உள்ள ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று நேரில் சென்று பார்வையிட்டதன் பின்னரே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒரு கலைஞராக, அவர் கலைத்துறைக்கு பெரும் சேவை ஆற்றி வந்தார். அவர் பொதுச்சேவைக்காக தனது கொடுப்பனவுகள், சம்பளம், சலுகைகள், வரப்பிரசாதங்கள் அனைத்தையும் அர்ப்பணித்தவர். நாளை (இன்று) அவர் முழுமையாக விடுதலை பெறுவார்.

மனிதாபிமானத்துக்கு முன்னுரிமை அளித்து, அவரை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4,இ)



# இறந்த நிலையில் ஒதுங்கிய கடலாமை

யாழ்ப்பாணம், பெப். 4

மயிலிட்டிக் கடற்கரையில், கடலாமையொன்று, உயிரிழந்த நிலையில் நேற்றுக் கரையொதுங்கியுள்ளது. கடற்கரைக்குச் சென்ற மீனவர்கள், வழங்கிய தகவலின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,23)

## பெப்.7 முதல் மார்ச் 7வரை-

# சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை!

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

கொழும்பு, பெப்.04

க.பொ.த. உயர்தரப் பரீட்சையை முன்னிட்டு நாட்டில் உள்ள சகல அரச மற்றும் அரச அனுமதி பெற்ற பாடசாலைகளுக்கு பெப்ரவரி 7 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 7 ஆம் திகதிவரையான ஒருமாத கால விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சு நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் ஆரம்பப்பிரிவு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படாதென அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தது. ஆயினும் அந்த அறிவிப்புக்கு பல தரப்புகளில் இருந்தும் எதிர்ப்புக் கிளம்பியது. குறிப்பாக இலங்கை ஆசிரியர் சங்கம், இந்த முடிவைத் திரும்பப் பெற்று சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தது. இந்த நிலையிலேயே நாட்டில் உள்ள அரச மற்றும் அரச அனுமதி பெற்ற பாடசாலைகள் அனைத்துக்கும் பெப்ரவரி 7 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 7 ஆம் திகதிவரை விடுமுறை வழங்கப்படுவதாகவும், இந்தக் காலப்பகுதியில் எந்தவொரு வகுப்பும் குறித்த பாடசாலைகளில் இடம்பெறாதெனவும் கல்வியமைச்சு நேற்று முன் தினம்அறிவித்துள்ளது. (அ-இ)

*நேற்றுப் பிரசுமான இந்தச் செய்தியில் 'மார்ச்' என்பதற்கு பதிலாக 'ஏப்ரல்' எனப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்* (ஆ-ர்)




கிட்டடியில பட்டதாரிப் பயிலுநர்மாருக்கு நிரந்தர நியமனம் குடுத்தவையெல்லோ. அப்பிடி யாழ்ப்பாணம் கச்சேரியிலயும் கொஞ்சப்பேருக்கு அப்பொயின் மெண்ட் கிடைச்சு வேலைக்கு வந்தவை. அப்பிடி புதிசா வந்த ஒரு பெண்பிள்ளைக்கு கலியாணம். அதுக்காக அரசாங்க உத்தியோகத்தர்மாருக்கு வழக்கமா குடுக்கிற லீவு தரச்சொல்லி மேலதிகாரியிட்ட கேட்டிருக்கிறா. ஆனால் அவான்ர செக்சனுக்குப் பொறுப்பான பெண் அதிகாரி, "நீங்கள் இப்ப புதிசா வந்தனியள். உங்களுக்கெல்லாம் அந்தச் சலுகை கிடையாது. லீவு எண்டது உங்கட உரிமை கிடையாது. நாங்களாப் பார்த்துச் செய்யிற சலுகை. சரி பாவமாக் கிடக்கு, ஆனால் நானும் சட்டப்படி தானே செய்ய முடியும். வேணு மெண்டால் இப்ப புதிசா நீர் டியூட்டிக்கு வந்த நாளின்ர வீதாசார அடிப்படையில ரண்டு மூண்டு நாள் லீவு தரலாம்" எண்டு இறுக்கமாச் சொல்லிப் போட்டா. அதின்படி அந்தப் பெண் உத்தி யோகத்தருக்கு வழக்கமா திருமணத்துக்கெண்டு அரச உத்தியோகத்தருக்கு குடுக்கிற லீவில, அரைவாசிக்கும் குறைவாத்தான் எடுக்கிறதுக்கு மேலதிகாரி அனுமதி குடுத்திருக்கா.

இப்பிடி 'சட்டத்தை மதிச்சு' லீவு குடுக்கமாட்டன் எண்ட அந்தப் பெண் மேலதிகாரி சட்டத்தை மதிக்கிறாவோ எண்டு ஆரும் கேக்கக் கூடாது. ஏனெண்டால் அவா வேலைக்கு வாறதுக்கு பிந்தினால், பிங்கர் பிரிண்டில கையை வைக்க மாட்டா. வைச்சால் வந்த நேரம் தெரிஞ்சு சம்பளத்தில வெட்டு வந்திடும். அதால பிந்தி வாற நாள்களில பிங்கர் அடிக்காமல், தனிய வரவுக் கொப்பியில மட்டும் சைன் வைப்பா.

இதே மேலதிகாரிதான், இவாக்கெண்டு குடுத்த உத்தியோகபூர்வ வாகனத்தை பாவிக்காமல் பஸ்ஸில வந்து போறா. ஆனால் அப்பிடி பஸ் ஸில வந்துபோனாலும் உத்தியோகபூர்வ வாகனத்தைப் பாவிச்சது எண்டு எரிபொருள் கொடுப்பனவை வாங்கிறா. சில பைல்களில இருக்கிற டொக்கிமெண்ட்ஸை நைசா கிழிச்செடுக்க வேலை செய்யிறதிலயும் ஆள் கில்லாடி. எல்லாத்தையும் விட எப்ப பார்த்தாலும் தன்ர மேசையில தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நித்திரை கொள்ளுறதுதான் அந்தப் பெண் அதிகாரியின்ர கட்டாயக் கடமை எண்டு அந்தப் பிரிவில வேலை செய்யிற ஆக்கள் சொல்லிச் சிரிக்கினம்.

இப்பிடியெல்லாம் செய்யிற அந்த அதிகாரி, ஒரு சின்னப்பிள்ளையின்ர கலியாணத்துக்கு லீவு குடுக்குறதுக்கு 'சட்டத்தை மதிக்கிறன்' எண்டு நாடகமாடுறது எந்த வகையில நியாயம்?

ஆனால், அதே பெண் பிள்ளைக்கு நியமனம் கிடைச்ச அதேநாளில, நியமனம் கிடைச்ச இன்னொரு பிள்ளைக்கும் கலியாணம் நடந்தது. அவா இன்னொரு பிரதேச செயலகத்தில வேலை செய்யிறா. அவாக்கு திருமணத்துக்கு எண்டு சொல்லி, 14 நாள் லீவு குடுபட்டிருக்கு. அங்க லீவு குடுக்க சட்டத்தில இடமிருக்கெண்டா, இஞ்ச கச்சேரியிலையும் இந்தப் பிள்ளைக்கு லீவு குடுத்திருக்கலாமே? சட்டம் இடத்துக்கு இடம், ஆளுக்கு ஆள் மாறுபடுமே எண்டது பட்சிக்கு விளங் கேலை. ஆரும் தெரிஞ்சவை சொல்லுவிங்களோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் இருந்து திரும்பிவர பஸ் இல்லை!

## மாணவர்கள் அந்தரிப்பு



**கிளிநொச்சி, பெப். 4**

**இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி-யாழ்ப்பாணம் வழித்தடப் பேருந்தை பிற்பகல் வேளையில் சேவையில் ஈடுபடுத்த கிளிநொச்சி மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணத்திலிருந்து காலை 5.45 மணிக்கு பயணிக்கும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து கிளிநொச்சி- கனகபுரம், முறிப்பு, ஊற்றுப்புலம், கோணாவில் வழியாக அக்கராயனைச் சென்றடையும். அதில் பல்வேறு பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் பயணிக்கின்றனர். பாடசாலை முடிந்தவுடன் மேற்படி பேருந்து கிளிநொச்சி - யாழ்ப்பாணம் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடாமையால் ஆசிரியர்களும் மாணவர்களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதுதொடர்பாக கிளிநொச்சி இலங்கை போக்குவரத்துச் சபையின் நிர்வாகத்திடம் கேட்டபோதும் அவர்கள் உரிய பதிலைத் தெரிவிக்கவில்லை. எனவே கிளிநொச்சி மாவட்டச் செயலர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மேற்படி கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-13)



# கல்வி நிலையம் திறந்து வைப்பு

மன்னார், பெப். 4

மன்னார், மாந்தை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அடம்பனில் லக்சுமி கரங்கள் தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில், லக்சுமி கல்வி நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

லக்சுமி கரங்களின் ஸ்தாபகர் சக்தி ராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாந்தை மேற்கு பிரதேச செயலர் சி.டி.அரவிந்தராஜ் விருந்தினராகக் கலந்துகொண்டு கல்வி நிலையத்தைத் திறந்து வைத்தார். (ம-ரி1-213)



# பாடசாலைக் கட்டடம் நீதியமைச்சரால் திறப்பு

யாழ்ப்பாணம், பெப்.4

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மூன்று மாடி பாடசாலைக் கட்டடம் நீதியமைச்சர் மொகமட் அலி சப்ரியால் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. வடமாகாண சபையின் வேண்டுகோளுக்கிணங்க தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் நிதியுதவியில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், நீதியமைச்சின் செயலாளர் மாயதுன்னை, வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். (வ-27)

# ஆறுமுகத்தான்குளத்துக்கு பேருந்துச் சேவை தேவை

முல்லைத்தீவு, பெப்.4

கரைதுறைப்பற்று ஆறுமுகத்தான்குளம் கிராமத்துக்கு பேருந்து சேவையை நடத்து மாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிராமத்தில், பல குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் பேருந்துச் சேவை இல்லாததால் மக்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக, முல்லைத்தீவு நகரத்துக்குச் செல்வதற்கு 5 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றே பேருந்துகளில் பயணிக்கவேண்டியுள்ளது. அத்துடன், மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சென்று வருவதற்கு பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் தமக்கான பேருந்துச் சேவையை நடத்தவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் ஆகியோரிடமும் கிராம மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-ரி1,13)



# சுற்றுலாத்துறை கற்கை: 52 பேருக்கு சான்றிதழ்

யாழ்ப்பாணம், பெப். 4

சமுர்த்தி குடும்ப வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், சுற்றுலாத்துறைக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு. யாழ். மாவட்டச் செயலகத்தில் அண்மையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் 16 வகையான பயிற்சி நெறிகளைப் பூர்த்திசெய்த, 52 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில், மாவட்டச் செயலர் க.மகேசன், சமுர்த்தி மாவட்டப் பணிப்பாளர் விஸ்வரூபன், சிரேஷ்ட முகாமையாளர் ரகுநாதன், யாழ். மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-4,159)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம்,பெப். 4

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கரவெட்டி, துன்னாலை குடவத்தை சிதம்பர விநாயகர் ஆலயத்தின் பிரதம குருவான கலாநிதி சிவஸ்ரீ நா.கலாதரக் குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயணமும் நாளை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ரி1)



# முன்பள்ளி மாணவர்களின் மாதிரிச் சந்தைக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.4

அச்சுவேலி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளி மாணவர்களின் மாதிரி சந்தைக் கண்காட்சி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சந்தையில் மரக்கறிகள், பலசரக்குப் பொருள்கள் மற்றும் உணவுக் கூடங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அச்சுவேலி மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவின் அதிபர் தி.சதீஸ்கரன், கோப்பாய் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் செல்வி நாகேஸ்வரி ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக தென்னிந்தியத் திருச்சபையின் வில்லியம் குடும்பத்தினர், இலவசமாக இந்த முன்பள்ளியை நடத்தி வருகின்றனர். (ம-4.23)

# அறநெறிப் பாடசாலைக்கு புதிய கட்டடம் கையளிப்பு

வவுனியா, பெப். 4

வவுனியா, கற்குளம் அறநெறிப் பாடசாலைக்காக அமைக்கப்பட்ட புதிய கட்டடம் மாணவர்களின் பாவனைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது. 'தமிழ் விருட்சம்' அமைப்பின் ஒழுங்கமைப்பில் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் இராமலிங்கம் நடராசாவின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது குடும்பத்தால் இந்தக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. மர நிழலில் கற்றல் செயற்பாடுகளை மாணவர்கள் மேற்கொண்டு வந்த நிலையில் இந்தப் புதிய கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### படகுக்குத்...

யில், வடமராட்சி மீனவர் ஒருவர் நேற்றுத் தனக்குத்தானே தீயிட்டு உயிரை மாய்க்க முற்பட்டபோது, தெய்வாதீனமான முறையில் அவர் சக மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளார். எனினும் இதன்போது அவரது படகு, வலைகள் என்பன முற்றாகத் தீயில் எரிந்து நாசமாகின. இந்தச் சம்பவம் வடமராட்சி, பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் முன்பாக நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

வடமராட்சி கடற்பரப்புக்குள் கடந்த வாரம் அத்துமீறிய இந்திய மீனவர்கள், வடமராட்சி மீனவர்களின் வலைகளை அறுத்து நாசப்படுத்தியிருந்தனர். இதன்போது குறித்த மீனவரின் வலைகளும் நாசமாக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய .மீன்பிடி நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தக்கோரி, வடமராட்சி மீனவர்கள் நேற்று நான்காவது நாளாகவும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அந்தப் போராட்டத்தின் ஓர் அங்கமாகவும், இந்திய மீனவர்களால் தனக்கு ஏற்பட்ட வாழ்வாதாரப் பாதிப்பைத் தாங்க முடியாமலும் பொலிகண்டிப் பகுதியைச் சேர்ந்த குறித்த மீனவர் தனது படகு , வலை உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றை எரியூட்டிவிட்டு, தானும் தீயிட்டு உயிர் மாய்க்க முயன்றார்.

இதனைக் கண்ணுற்ற சக மீனவர்கள் உடனடியாகப் பாய்ந்துசென்று அவரது உயிர்மாய்ப்பு முயற்சியைத் தடுத்து நிறுத்தினர். ஆயினும் மீனவரின் படகு, வலைகள் என்பன தீயில் கருகி நாசமாகின. (அ-26)

### எழுத்து...

பகுதி மீனவர்கள் இருவரின் சாவுக்கு நீதி கோரியும், வடமராட்சிப் பகுதி மீனவர்களின் போராட்டம் நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. கடந்த மூன்று தினங்களைப் போல நேற்றும் யாழ் .-பருத்தித்துறை வீதி, பருத்தித்துறை -பொன்னாலை வீதி ஆகிய இரு வீதிகளையும் வழிமறித்து மீனவர்கள் எழுச்சியுடன் நேற்றும் போராட்டத்தை சுப்பர்மடத்தில் முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களுடன் கலந்துரையாட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்,கடற்றொழில் நீரியல் வளத்திணக்கள அதிகாரிகள் போராட்டக் களத்துக்கு வருகை தந்தனர். இதன்போது இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளில் 'இந்தியமீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்துவதாக எழுத்துமூல உறுதிமொழியை வழங்கினால் போராட்டத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரத்தயார்' என மீனவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் 'நான் சொன்னால் செய்வேன். என்மீது நம்பிக்கையில்லாமல் எழுத்துமூல உறுதிமொழியைக் கேட்டால் என்னால் வழங்கமுடியாது' என்று அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார். இதனையடுத்து அங்கு பெரும் அமைதியின்மை ஏற்பட்டது. மீனவர்கள் அமைச்சர் டக்ளஸுக்கு எதிராகக் கோஷங்களையும் எழுப்பினர். இந்த நிலையில் கோபத்தோடு பேச்சின் இடைநடுவே அமைச்சர் டக்ளஸ் வெளியேறினார். மீனவர்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. (அ -20)

### "டேய்....

றிய அமைச்சர் டக்ளஸ், நிதானமிழந்து மீனவர்களை தரக்குறைவான ஏகவசனத்தில் பேசியபடியே, வெளிநடப்புச் செய்துள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்தும், வத்திராயன்பகுதி மீனவர்கள் இருவரின் சாவுக்கு நீதி கோரியும், வடமராட்சி சுப்பர்மடம் பகுதியில் மீனவர்களின் போராட்டம் நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. இந்த நிலையில் மீனவர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவரும் பேச்சுக்களில் மீனவர்களுடன் அமைச்சர் டக்ளஸ் ஈடுபட்டிருந்தார். இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்கும் வகையில் எழுத்துமூல உறுதிமொழியை வழங்க அமைச்சர் டக்ளஸ் மறுத்தார். இதனால் மீனவர்களிடையே பெரும் சலசலப்பு உண்டானது. மீண்டும் மீண்டும் எழுத்துமூல உறுதிமொழியை மீனவர்கள் கோரினர். இதனால் அமைச்ச டக்ளஸ் பேசும்போது மீனவர்கள் குறுக்கிட்டு தங்கள் தரப்பு நியாயத்தை முன்வைத்தனர். இதனால் அமைச்சருக்கு வந்ததே கோபம். ஒலிவாங்கியைத் தூக்கி எறிந்துவிட்டு, "டேய், நான் கதைச்சுக் கொண்டிருக்கிறன், நீ சும்மா சும்மா குறுக்க கதைச்சுக் கொண்டிருகிறாய், போடா" என்று ஏகவசனத்தில் மீனவர்களைத் தரக்குறைவாகத் திட்டியபடி அங்கிருந்து வெளியேறினார். (அ -20)

### கச்சேரி...

லில் உயிரிழந்த வத்திராயன் மீனவர்கள் இருவரின் சாவுக்கு நீதி கோரியும், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தினர் நேற்று யாழ்.நகரில் மேற்கொண்ட போராட்டத்தால் யாழ்.மாவட்ட செயலகம், ஆளுநர் அலுவலகம் என்பவற்றின் நாளாந்தச் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. ஏ-9 வீதியையும் மீனவர்கள் வழிமறிப்புச் செய்தமையால் அந்த வீதியூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் யாழ்.மாவட்டச் செயலகம், ஆளுநர் அலுவலகம் என்பவற்றுக்கு முன்னால் ஒன்றுதிரண்ட மீனவர்கள் குறித்த இரு அலுவலகங்களினதும் வாசல்களை மறித்து முற்றுகைப் போரில் குதித்தனர். அத்தோடு யாழ்.கச்சேரி -நல்லூர் வீதியில் உள்ள இந்தியத் துணைத்தூதரின் வாசஸ்தலமும் மீனவர்களின் முற்றுகையில் சிக்கியது. இதன்போது, மாவட்டச் செயலகம், ஆளுநர் அலுவலகம் என்பவற்றில் பணிபுரிபவர்களையும் அந்த அலுவலகங்களுக்குள் செல்ல மீனவர்கள் அனுமதிக்கவில்லை. அதனால் நீண்டநேரம் காத்திருந்த பின்னர் சகல அலுவலர்களும், அலுவலங்களில் பயன்பெற வந்திருந்த பொதுமக்களும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை, கச்சேரியை அண்மித்த ஏ9 வீதியையும் வழிமறித்த மீனவர்கள் அதனூடான சகல போக்குவரத்துகளையும் துண்டித்தனர்.

எனவே மாற்றுப்பாதைகளூடாக மக்கள் பயணித்தனர். இந்த நிலையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு வந்து, மீனவர்களுடன் உரையாடி, போராட்டத்தை முடிக்குமாறு வேண்டினார். ஆயினும் மீனவர்களில் ஒருசாரார் அதற்கு உடன்படாத நிலையில், அமைச்சர் டக்ளஸ் அங்கிருந்து வெளியேறினார். இதனையடுத்து எவ்வித முடிவுகளும் எடுக்கப்படாத நிலையில் பிற்பகல் 3 மணியளவில் மீனவர்கள் தங்கள் முற்றுகைப் போரை நிறுத்தி, அங்கிருந்து கலைந்து சென்றனர். (அ-26, 20, 27)

### மீனவர்களை...

கின்றது ராஜபக்ச அரசு." இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர்கள் முன்னெடுத்துவரும் போராட்டம் தொடர்பில் 'உதயனுக்கு' கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இலங்கை- இந்திய மீனவர்களின் பிரச்சினையிலும் ராஜபக்ச அரசு அரசியல் இலாபம் தேடுகின்றது. அதனால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இந்த அரசு பின்னடிக்கின்றது. நாட்டின் நலன் கருதி- வடக்கு கரையோர மக்களின் நன்மை கருதி- இந்திய அரசுடன் இது தொடர்பில் அரசு பேச்சு நடத்த வேண்டும்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் வடக்கு கடல் வளம் பாதிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. வடக்கு மீனவர்களின் உணர்வுமிக்க போராட்டத்துக்கு உரிய தீர்வு கிடைக்க வேண்டும்" - என்றார். (அ-22)

### நீதிமன்றம்...

லைக் கண்டித்தும், வத்திராயன்பகுதி மீனவர்கள் இருவரின் சாவுக்கு நீதி கோரியும், வடமராட்சி - பருத்தித்துறை , சுப்பர்மடம் பகுதியில் கடந்த நான்கு நாட்களாக மீனவர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டத்துக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

மீனவர்களின் போராட்டத்துக்கு தடை விதிக்க கோரி , பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பருத்தித்துறைப் பொலிஸார் , நேற்று வியாழக்கிழமை விண்ணப்பம் செய்திருந்தனர்.

'வீதிகளை வழிமறித்து கொட்டகை அமைத்து, மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுப்பதனால், குறித்த வீதிகள் ஊடான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தல் , கொரோனா பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. எனவே இந்தப் போராட்டத்துக்கு தடைவிதிக்க வேண்டுமென மன்றில் பொலிஸார் கோரினர்.

பொலிஸாரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, மீனவர்களின் போராட்டத்துக்கு நீதிமன்று தடை விதித்து கட்டளை பிறப்பித்தது.

நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் , நேற்றுமாலை போராட்டக்களத்துக்கு வந்த பொலிஸார் வீதி மறியலில் ஈடுபட்டுள்ள மீனவர்களை கலைந்து செல்லுமாறு அறிவித்தனர். அதற்கு மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனையடுத்து அங்கு விசேட அதிரடி படையினரும் வரவழைக்கப்பட்டு, வீதியில் அமைக்கப்பட்டிருந்த போராட்டக் கொட்டகை அகற்றப்பட்டது. (அ-26)

### போராட்டம்...

இன்று, சுமார் 200க்கும் மேற்பட்ட படகுகளில் கறுப்புக்கொடி ஏந்தியவாறு வடமராட்சிக் கடலிலும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என்று மீனவர்கள் அறிவித்துள்ளனர். (ம-26)

## மீனவர்களுக்கு நீதிகோரி மாதகலிலும் வீதிமறியல்

யாழ்ப்பாணம், பெப். 4

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலைக் கண்டித்து, மாதகலில் நேற்று வீதிமறிப்புப் போராட்டம் இடம்பெற்றது.

மாதகல் கிராமிய கடற்றொழில் அமைப்புகள் இணைந்து, துறைமுக சந்தியில் படகுகள் வலைகளை வீதியில் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டன. அத்துமீறும் இந்திய மீனவர்களைக் கைது செய்யக் கோரியும் உயிரிழந்த இரண்டு மீனவர்களுக்கு நீதி கோரியும் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. (ம-27)

## குழந்தையை பிரசவித்த தாய் ஒரு வாரத்தின் பின்னர் சாவு!

யாழ்ப்பாணம், பெப். 4

தலைச்சுற்று காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த கர்ப்பிணிப் பெண் குழந்தை பிரசவித்து, ஒரு வாரத்தின் பின்னர் நேற்றைய தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

மன்னார் - இலுப்பைக்கடவையைச் சேர்ந்த தீபன் ரபேக்கா (வயது-24) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார். கடந்த மாதம் 21ஆம் திகதி அதிகாலை குறித்த பெண் மயங்கி விழுந்துள்ளார். இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அவர் சேர்க்கப்பட்டார். கடந்த 24ஆம் திகதி பெண் சிசுவைப் பெற்றெடுத்த அவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். குறித்த சிசுவும் கடந்த 28ஆம் திகதி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரங்களை தக்கவைத்தாலே தமிழின அழிப்பைத் தடுக்கலாம்

## ஜனநாயகப் போராளிகள் கட்சி வலியுறுத்து

முல்லைத்தீவு, பெப். 4

**தமிழர்களுடைய உரிமைகளை முழுமையாக இல்லாதொழித்து, தமிழினத்தின் அடையாளத்தைச் சிதைப்பதற்காக, சிங்கள இனவாதிகள் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த வேளையில், நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு, சில அதிகாரங்களைத் தக்கவைக்க வேண்டும் இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பத்திரிகை மாநாடொன்றில், 13ஆம் திருத்தச்சட்டம் எமது மக்களுக்கான ஒரு தீர்வு அல்ல. அதனை நாங்கள் நிராகரிக்கின்றோம்.

ஆனால், எமது மக்களுக்கு சில நன்மைகள் இடம்பெற்றால் அதனை எதிர்க்க வேண்டிய தேவை இல்லை என்று கூறியிருந்தார்.

ஆயுதப் போராட்ட காலத்தில் தலைவர், தளபதிகள் அந்தச் சூழலில் போராட்டத்தின் நிலைப்பாடுகள் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் திரும்பவும் மீள் நினைவூட்டலை மக்களுக்குச் செய்து வருகின்றது. தலைவருடைய கொள்கையையும், இலட்சியத்தையும் இன்று எந்தவொரு அரசியல் கட்சிகளும் கொண்டுபோக முடியாது. அது மிகவும் கனதியானது. இறுக்கமானது அர்ப்பணிப்புள்ளது.


அதை இன்று அரசியல் கட்சிகளினூடாக நடைமுறைப்படுத்த நினைப்பது தவறானது.

ஒவ்வொரு கட்சிகளின் கொள்கைகளின் அடிப்படையில் உங்கள் அரசியலை முன்னெடுக்கலாம். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய தேவை இல்லை.

அது அவர்களின் ஜனநாயக உரிமை. ஆனால் பொய்யான வரலாறுகளைப் பரப்பினால் ஏற்றுக்கொள்ள முடியாது.

13ஆம் திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வு, தமிழ்த் தேசியத்துக்கான இறுதித் தீர்வு என்று யாரும் கருதி விட முடியாது. நாங்கள் அந்த நிலையை எட்டுவதற்காக தமிழர்கள் ஓரணியாக, பலமான சக்தியாக எங்களுடைய நிர்வாக அலகுகளை நாங்கள் ஆட்சி செய்வதற்காக 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கேட்கின்றோம். இந்தியாவின் அனுசரணையோடு கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டம் என்பதால், நாங்கள் இந்தியாவிடம் இதனைக் கோருகின்றோம். நிச்சயமாக அதில் எந்தத் தவறும் இல்லை - என்றார்.

(ம-4-19)



## வீடு புகுந்து தாக்குதல் 3 சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், பெப். 4

கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற குழு கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து கடந்த செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தியது. சம்பவம் தொடர்பில் சி.சி.ரி.வி. காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு, விரைந்து செயற்பட்ட கோப்பாய் பொலிஸார், சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர்கள் என்றும், காதல் விவகாரம் காரணமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4-20,125)

## சிறப்புச்சொற்பொழிவு

சாவகச்சேரி, பெப். 4

தென்மராட்சி வரணி மாசேரி திருவருள்மிகு புராதன குருநாதர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு 'நாவலர் ஆண்டில் நாவலர் நாமம் போற்றுவோம்' என்னும் கருப்பொருளிலான சிறப்புச்சொற்பொழிவு, எதிர்வரும் 7ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை மாலை 6.30 மணிக்கு கோயிலின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சைவப்புலவர்கள், இளஞ்சைவப்புலவர்கள் சிறப்புச்சொற்பொழிவுகளை ஆற்றவுள்ளனர்.

(ம-ரி1)

## மக்களுக்கு இடையூறாக செயற்படும் தவறணை

மிருசுவில்- உசன் சந்தியிலிருந்து கெற்பேலிக்குச் செல்லும் வீதியில் அமைந்துள்ள கள்ளுத் தவறணையால், அந்தப் பகுதி மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். வீதியின் பனங்காட்டுச் சந்தி ஊடாகப் பயணிக்கும் பாடசாலை மாணவிகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவிகளுக்கு தவறணைக்கு முன்பாக மதுபோதையில் நிற்போர் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி இடையூறு விளைவிக்கின்றனர். இது தொடர்பாக கிராம அலுவலர் மற்றும் பொலிஸாருக்கு முறையிட்டபோதிலும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்டோர் தெரிவித்துள்ளனர்.

(ம-4-9)



## பாலத்தை மூடி வீதி சீரமைப்பு

### மக்கள் எதிர்ப்பு

முல்லைத்தீவு, பெப். 4

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம், சிவநகர் கிராமங்களுக்கு மத்தியில் செல்லும், ஜேசுதாஸ் வீதி ஏற்கனவே உள்ள பாலத்தை மூடி சீரமைக்கப்படுகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் 1.28 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இந்த வீதி, தற்போது செப்பனிடப்பட்டு வருகின்றது. இதில் ஒரு பாலம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள போதும், ஏற்கனவே நீர் வடிந்தோடக்கூடிய தாழ்நிலப்பகுதி வீதியில் உள்ள பாலத்தை மூடி புனரமைக்கப்படுகின்றது. இதனால் மழைக் காலத்தில் வெள்ளம் மக்களின் காணிகளுக்குள் நிரம்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பழைய பாலம் அமைந்துள்ள பகுதியில், புதிய பாலமொன்று அமைக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4-19)

## கராச்சி பொதுமயானத்தில் சிரமதானம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், பெப்.4

சங்கானை கிழக்கு J/178 பகுதியிலுள்ள கராச்சி பொது மயானம் பிரதேச மக்களதும் பாதுகாப்பு படையினரதும் ஒத்துழைப்புடன் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் திருமதி துவாரகா தேவி ஜெயகாந்தனின் ஏற்பாட்டில் இந்த சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்;

நீண்டகாலமாக சிரமதானப் பணிகளை முன்னெடுக்காமையால் மயானம் பல்வேறு கழிவுகளால் நிறைந்திருந்தது. வெளியிலிருந்து பலர் கொண்டுவந்து தமது கழிவுகளைக் கொட்டுவதால் மயானம் பல சுகாதார சீரழிவுகளுடன் காணப்பட்டது. இது தொடர்பில் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டும் அது கருத்திற் கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் எமது பிரதேச மக்களதும் பாதுகாப்பு தரப்பினரதும் ஒத்துழைப்புடன் மயானத்தை துப்புரவு செய்துள்ளோம். வருங்காலங்களில் மயானத்தை துப்புரவாகப் பேணுவதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று நம்புகிறோம் -என்றார்.

(வ-20)

## பொலிஸாருக்கு ஆள்சேர்ப்பு வடக்கிலிருந்து விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப். 4

பொலிஸாருக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக, வடமாகாணத்தில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 18 முதல் 25 வரை உள்ள இளைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். அவர்கள் திருமணம் செய்யாதவர்களாக இருக்கவேண்டும். அத்துடன் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். மேலும் 5 அடி 4 அங்குலத்துக்குக் குறைவான உயரம் கொண்டிராதவராகவும் இருக்க வேண்டும்.

இதற்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பப் படிவங்களை அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியும். (ம-4-23)

## மஹா கும்பாபிஷேகம்

காங்கேசன்துறை முதலிவளவு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் கர்மாரம்பம் இன்று காலை 6.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நாளை காலை 7 மணிக்கு எண்ணெய்க்காப்பும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 9.04 வரை நூதன மூர்த்திகளான முத்துமாரி அம்மன், விநாயகர், முருகன், மற்றும் வைரவப்பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகமும் இடம்பறவுள்ளதால் அடியவர்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

(ம-ரி1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வடகொரியா கொடுத்தது பேரழிவு ஆயுதங்களா?

'போரின்போது கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி, வடகொரியாவிடம் இருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன' என்று தெரிவித்துள்ளார் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச. 2009ஆம் ஆண்டு இறுதிப் போர் இடம்பெற்ற காலத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற அந்தஸ்தோடும், அரசின் 'ரிமோட் கொன்ரோலாக' இருந்தவர் பஸில். பஸிலின் சகோதரர்களான மஹிந்த ராஜபக்ச அப்போது ஜனாதிபதியாகவும், கோத்தாபய ராஜபக்ச அப்போது பாதுகாப்புச் செயலராகவும் பதவி வகித்தனர். ஆக, இறுதிப் போர்க்காலத்தில் அரசின் நகர்வுகளைத் தீர்மானித்த மூவரில் ஒருவராக பஸிலும் இருந்தார். அந்த வகையில் பஸிலின் இந்தக் கருத்தானது, இறுதிப் போரின்போதும் அதன் அண்மைய காலங்களிலும் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படும் இனப்படுகொலைகளுக்கான ஒரு சாட்சியமாக மாறியுள்ளது.

இறுதிப்போரின்போது சீனா, ரஷ்யா, இஸ்ரேல், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆயுத உதவிகளைச் செய்வதற்கு ஆர்வம் காட்டின. இலங்கை கோரிக்கை விடும் பட்சத்தில் இன்னும்பல நாடுகள் ஆயுத உதவிகளை வழங்குவதற்கும் தயாராக இருந்தன. இப்படியிருக்கையில் எதற்காக கறுப்புப் பணத்தை மையமாக வைத்து வடகொரியாவிடம் இருந்து அப்போதைய அரசாங்கம் ஆயுதக் கொள்வனவை மேற்கொண்டது? எவ்வகையான ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன? இந்த ஆயுதக் கொள்வனவு ஏன் இவ்வளவு காலமும் இரகசியமாகப் பேணப்பட்டது? என்ற கேள்விகள் இங்கே எழுவது தவிர்க்க முடியாததாகின்றது .

உலகில் அதீத இராணுவச் சித்தாந்தமும், சர்வதிகாரப் போக்கும் உள்ள நாடு வடகொரியா. தன்னை சர்வ வல்லமைபெற்ற இராணுவத் தேசமாக ஆக்கிவிட வேண்டும் என்பதற்காக வடகொரியா எந்தநிலைக்கும் செல்லக் கூடிய நாடு. இதற்கு அந்த நாடு கடந்த 30 நாள்களில் மேற்கொண்ட 7 அணுவாயுத – ஏவுகணைச் சோதனைகள் ஆகப்பெரும் சான்றுகள். அமெரிக்காவாலும், ஐக்கிய நாடுகள் சபையாலும், மேற்கத்தியக் கூட்டணியாலும் தடைசெய்யப்பட்ட – மனித குலத்துக்கு ஒவ்வாத– சர்வதேசத்தால் அனுமதிக்கப்பட்ட போர்ப் பொறிமுறைகளுக்கு அப்பாற்பட்ட– ஆயுதங்களை இருப்பில் வைத்துள்ள நாடு வடகொரியாதான். இதனால்தான் இன்று ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை வாங்கிக்குவித்து உண்ண உணவின்றி வடகொரியா அல்லாடிக் கொண்டிருக்கின்றது.

இறுதிப் போரின்போது மனித குலத்துக்கு ஒவ்வாத ஆயுதங்களையும் போர்ப் பொறிமுறைகளையும் இலங்கை அரசாங்கம் கைக்கொண்டது என்பது ஐக்கிய நாடுகள் சபை முன்வைத்த இமாலயக் குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டின் மீதுள்ள உண்மைத்தன்மையை வடகொரியாவிடம் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை அரசாங்கம் கறுப்புப் பணத்துடன் அணுகியமை மெய்ப்பிதம் செய்கின்றது.

எவ்வாறான ஆயுதங்கள் வடகொரியாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டன? அவை உரியவகையில் தரவுக் கட்டமைப்பில் பதிவுசெய்யப்பட்டனவா? எதற்காக இந்தக் கொள்வனவுக்குக் கறுப்புப் பணம் பயன்படுத்தப்பட்டது? ஓராண்டுக்கும் மேலாக பொருளாதாரத் தடை இருக்கின்றபோதும் வடகொரியா ஓயாமல் மேற்கொள்ளும் அணுவாயுதச் சோதனைக்கும் இலங்கையிடம் இருந்து பெற்றுக்கொண்ட கறுப்புப் பணத்துக்கும் தொடர்புள்ளதா? வடகொரியாவிடம் இருந்து பெறப்பட்ட ஆயுதங்களை வைத்து மேற்கொள்ளப்பட்ட போர்ப்பொறிமுறை என்ன? இப்போதும் வடகொரியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கறுப்புப்பண 'டீலிங்' தொடர்கிறதா? ஆகிய கேள்விகளுக்கான பதில்களை சர்வதேசம் தற்போது தேடவேண்டியிருக்கின்றது.

'நுணலும் தன் வாயால் கெடும்'. பஸிலும் தன்வாயால் வடகொரியாவிடம் கறுப்புப்பணத்தில் ஆயுதக்கொள்வனவு செய்ததை ஒத்துக்கொண்டுள்ளார். அவரின் கூற்றை மிகப்பெரிய போர்க்குற்றச் சாட்சியமாகக் கொள்ளலாம். இதை இறுகப்பற்றி தொடர்ச்சியான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு ஐ.நாவுக்கு உண்டு. அதைத்தான் தமிழர்களும் எதிர்பார்க்கின்றனர்.

## நாளொரு நல்வார்த்தை

"யதார்த்தம் மனதினால் உருவாக்கப்பட்டது, நம் மனதை மாற்றுவதன்மூலம் நம் யதார்த்தத்தை மாற்ற முடியும்". -பிளேட்டோ



# பூஸ்டர் தடுப்பூசி ஏற்றியோருக்கே கேதீஸ்வரத்துக்குள் நுழைய அனுமதி!

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவிப்பு



**மன்னார், பெப். 4**

**மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரிக்கு வருபவர்கள் கட்டாயமாக பூஸ்டர் தடுப்பூசி பெற்றிருக்க வேண்டும் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.**

மன்னர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் மாவட்டத்தில் தொற்றாளர்களின் சடுதியான அதிகரிப்பால் ஒமிக்ரோன் திரிபு இருக்கக்கூடும் எனும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. பொது மக்கள் மிகவும் அவதானத்துடன் சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக பெற்றுக்கொள்ளவும். மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறவிருக்கும் திருக்கேதீஸ்வர சிவராத்திரி விழாவுக்கு வருகை தரவிருக்கின்ற பக்தர்கள் கட்டாயமாக மூன்றாவது பூஸ்டர் தடுப்பு ஊசியைப் பெற்று இரண்டு வாரங்கள் நிறைவடைந்திருக்க வேண்டும். ஆகவே எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் இவர்கள் மன்னாரில் அல்லது தாங்கள் தங்கியிருக்கும் மாவட்டத்தில் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும். வேறு மாவட்டங்களிலிருந்து இங்கு வரவிருப்பவர் அந்த மாவட்டங்களில் பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் இருந்தால் எமது பணிமனையுடன் தொடர்புகொள்ளும் பட்சத்தில் இவர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதற்கு விசேடமான ஏற்பாடுகள் ஒழுங்கமைத்துத் தரப்படும் - என்றார். (வ-213)

# சாவகச்சேரி சந்தையில் தடுப்பூசி அட்டை சோதனை

சாவகச்சேரி, பெப். 4

சாவகச்சேரி பொதுச்சந்தை வியாபாரிகளிடம் நேற்றுமுன்தினம் தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டைகள் சோதனை செய்யப்பட்டன. அட்டையில்லாதவர்கள் எடுத்து வருமாறு வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். சாவகச்சேரி பொதுச்சந்தையில் கொரோனா தடுப்பூசிகள் ஏற்றாதவர்கள் வியாபாரம் செய்ய சுகாதாரப் பகுதியினர் தடை விதித்துள்ளனர். இதனையடுத்து படையினர் சந்தை வியாபாரிகளுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகளை மேற்கொண்டனர். சுகாதாரப் பகுதியினரும் படையினரும் இணைந்து வியாபாரிகளிடம் தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டையைப் பரிசோதனை செய்து, பூஸ்டர் தடுப்பூசி ஏற்றாத வியாபாரிகளுக்கு சந்தையில் தடுப்பூசி ஏற்றினர். இதேவேளை - நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் பணியாற்றுகின்றவர்களில் தடுப்பூசி ஏற்றாதவர்களுக்கு நாளை சனிக்கிழமை காலை சந்தையில் வைத்துத் தடுப்பூசி ஏற்றப்படுமென சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (வ-9)

நாளை 05.02.2022 சனிக்கிழமை தை 23

சுபநேரம் : 03.35 - 05.05
ராகுகாலம் : 09.35 - 11.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய
இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவி

## அமரர் திருமதி
## சிவராசா இந்திராணி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (02.02.2022) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (04.02.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எம் அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும், மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்திய எம் அன்பு உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், வைத்தியர்கள், தாதியர்களுக்கும் மற்றும் அன்னாரின் இறுதியாத்திரையிலும் கூடவே இருந்த அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிக் காணிக்கைகளை சமர்ப்பிக்கின்றோம்.

மலர்வு 08.10.1959
உதிர்வு 05.01.2022

ஈஞ்சடி வைரவர்கோயிலடி,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
021 225 5366

குடும்பத்தினர்
AVS.Rice Mill,
Inuvil


■ நாகலிங்கம் தங்கவேல்



# தென்மராட்சியின் மட்டுவிலில் இருந்து அருளாட்சி புரியும் லூர்து அன்னை

தென்மராட்சியில் மட்டுவில் பிரதேசம் மிகவும் தொன்மை வாய்ந்தது. இது இந்துகளும் கிறிஸ்தவர்களும் தெய்வ அனுகூலத்துடன் வாழும் பிரதேசமாகும். இந்தப் பிரதேசத்தில் வரலாற்றுத் தொன்மை கொண்ட ஆலயமாக மட்டுவில் கல்வம் சிவன் ஆலயம், மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். அதேபோல் மட்டுவில் வடக்கில் வரலாற்றுச் சிறப்புக் கொண்ட கிறிஸ்தவ ஆலயமாக புனித லூர்து மாதா ஆலயம் சிறப்பு பெறுகின்றது. இது சுமார் 100 வருடங்களுக்கு மேலான பழமை கொண்ட புனிதமான ஆலயமாக விளங்குகின்றது.

**இன்று மட்டுவில் லூர்து அன்னை ஆலயத்தின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

இந்த ஆலயம் சாவகச்சேரி கத்தோலிக்க பங்கின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. இதன் பங்குக் குருவாக வணக்கத்துக்குரிய ஞானரூபன் அடிகளார் செயற்படுகின்றார். ஆலயத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் வழிபாடுகள் நடத்தப்படும். காலத்துக்கு காலம் ஆலய பங்கு மக்களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி காரணமாக, ஆரம்பத்தில் சிறிய ஆலயமாக இருந்த இந்த ஆலயம் தற்போது பெரிய ஆலயமாக வளர்ச்சி கண்டுள்ளது.

ஆலயத்தின் வாசலில், மலைவடிவமாக அமைக்கப்பட்ட பகுதியில் மாதாவின் திருச்சொரூபம் வைக்கப்பட்டுள்ளது. நோய்வாய்ப்பட்டவர்கள் ஆலயத்துக்கு சென்று மாதாவை மனதில் இருத்தி வழிபட்டால் நோய்கள் யாவும் பறந்தே விடும். பக்தர் ஒருவர் குறிப்பிகையில், திடீரென அவருக்கு நெஞ்சில் சுகவீனம் ஏற்பட்டுவிட்டது. ஆலயத்தில் கொடியேற்ற உற்சவம் தொடக்க நாளான அன்று, அவர் செல்லும்பொழுது மாதாவே உனது திருவிழா நிறைவு நாளான 4ஆம் திகதி உனது திருப்பலிப் பூசைக்கு வரத்தக்க முறை யில் குணமாக்கிவிடு தாயே என வேண்டியிருந்தார். என்ன அற்புதம். அவர்சுகமடைந்து திருப்பலிப் பூசைக்கு ஆலயம் வந்துவிட்டார். இவ்வாறு பல அற்புதங்கள் நிகழ்ந்த பெருமை இந்த ஆலயத்துக்கு உண்டு.

ஆலய கொடியேற்ற உற்சவம் வருடாவருடம் ஜனவரி மாதம் 30ஆம் திகதி ஆரம்பித்து பெப்ரவரி 4ஆம் திகதி தேர்த் திருவிழா இடம்பெறும். மாதா வீதி வலம்வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுக்கும் அற்புதம் எல்லோர் மனதையும் மாதாவின் அருளாட்சிக்கு இட்டுச் சென்றுவிடும்.

ஆலய உற்சவத்துக்கு குடாநாட்டில் பல இடங்களில் இருந்தும் வழிபட பக்தர்கள் வரும் அற்புதம் மனதைத் தொடும். தேர்த்திருவிழாவான இன்று அன்னையின் ஆசீர்வாதமும் பரிந்துரைகளும் எமக்குக் கிடைக்க [illegible] இதர துன் [illegible] மனவும் மன்றாடுவோம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த (06.01.2022) அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் இராசையா தெய்வேந்திரன்

(உரிமையாளர் : இந்திரன் ஜுவல்லர்ஸ்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.02.2022) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (05.02.2022) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
15.12.1979

உதிர்வு
26.01.2012

## கனகரத்தினம் தர்மரூபி (ரூபி)

திதி : 04.02.2022

காலமெலாம் கனக மணியாய் காசினியில் வாழ வேண்டியவளே காலன் வந்து உனைக் கண்ணெதிரே கவர்ந்து சென்றதேனோ? நிஜங்கள் நிலைப்பதில்லை நினைவுகள் அழிவதில்லை என்பர் சிரித்து வாழ்ந்த நினைவுகள் மனதிலே நினை வலையாய் ஆடுதே. பாலகராய் பள்ளி சென்ற பருவத்து நினைவுகள் பாதி மனதை ஆழுதே பிரிவினால் பரிதவித்த ஈரவிழிகள் ஓய்ந்தாலும் இதய விழிகள் நீர் சொரிகிறதே. பாசத்தோடு உன் வாழ்வை நாம் பாரினிலே எதிர் பார்த்திருந்தோமே. குடும்பத்தின் குலக்கொடியாய் கூடிக்குலாவி வாழ வேண்டிய நீ எமைப் பிரிந்து இடும்பை தனையெமக்களித்து சென்று விட்டதேனோ? கல்லும் கசிந்துருகும் கனிவான மொழி பேசி வாழ்ந்து மகிழ்ந்த நீ மங்களம் கண்டு மனம் மகிழும் மழலையோடு வாழ வேண்டியவளே விதியின் கொடுமையால் மண்ணுலகில் விதையாகி விண்ணுலகில் விருட்சமானீரோ! நின் பிரிவைப் பறை சாற்றி பரிதவித்த நாளை எண்ணுகின்றேனின்று. தேசத்து உறவெல்லாம் நின் துயரில் உறங்கா திருந்து கொண்டனரே. ஈரைந்து ஆண்டு சென்றாலும் உன் ஆத்ம சாந்திக்காகவே இறைவனிடம் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!!! சாந்தி!!!

(CS 42666) (3.6)

தற்காலிக முகவரி
கந்தையா உபாத்தியாயர் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்

குடும்பத்தினர்
நிரந்தர முகவரி
சாயுடை, மாவிட்டபுரம்

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பலகாலம் தள்ளிப்போன விடயம் ஒன்று உங்களது முயற்சியால் முடியும். உற்சாகமான நாள். வீடு வாங்கும் யோகம் வரும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். நிம்மதியான நாள்.

**இடபம்:** நீண்ட கால முயற்சி காரணமாக இன்று பெரிய நன்மை நிகழும். தேவையற்ற கற்பனை காரணமாகத் தளர்ச்சி வேண்டாம். நீங்கள் நினைத்தது நிறைவேறும்.

**மிதுனம்:** தைரியமாக செயலாற்றி முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வெற்றி பற்றிய நம்பிக்கை அதிகரிக்கும். இனியநாள். சந்தோஷம் அடைவீர்கள்.

**கடகம்:** அலைச்சல் இருக்கும். காதலர்களுக்கு மனநிறைவு ஏற்படும். சிறு ஏமாற்றம் வந்து நீங்கும். மன அழுத்தம் தீரும். பழைய சம்பவங்களால் ஏற்பட்ட வருத்தம் இன்று முடிவுக்கு வரும்.

**சிம்மம்:** வெற்றிகரமான நாள். அலுவலகப் பணியில் திருப்தி உண்டாகும். புதிய விடயம் ஒன்றைத் தொடங்கி மனநிறைவு பெறுவீர்கள். மனதுக்கு இனிய நாள். மகனால் ஏற்பட்ட மன வருத்தம் நீங்கும்.

**கன்னி:** உடல்நலம் சீராகும். கடன் பிரச்சினைகளைச் சமாளிப்பீர்கள். நீண்டநாளாக இருந்த பிரச்சினை ஒன்று தீரும். மகிழ்ச்சிகூடும். ரகசியத்தை பகிர்ந்துகொண்ட நபரால் [illegible] வரலாம்.

**துலாம்:** பணியாளர்களுக்கு நல்ல செய்தி ஒன்று வந்து மகிழ்விக்கும். பொறுப்பு அதிகமாகும். எதிரியின் பலவீனத்தைக் கண்டறிவீர்கள். வாழ்வில் முன்னேற்றம் அடைய முயற்சி செய்வீர்கள்.

**விருச்சிகம்:** இன்று மாலை நல்ல செய்தி வரும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். சொத்துப் பற்றிய பேச்சு ஒன்று சாதகமாக முடியும். உங்களுக்கு புகழும், விருதும் கிடைக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு:** உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். வீண் அலைச்சல் முடிவுக்கு வரும். தெய்வ நம்பிக்கை துணை கொண்டு நிம்மதி அடைவீர்கள். மனதில் உற்சாகம் அதிகரிக்கும்.

**மகரம்:** எதிர்பார்த்த நன்மை தாமதமாகும். பழைய நட்பு புதுப்பிக்கப்படும். கடந்த [illegible] நீங்கள் செய்த செயல்கள் இன்று விளைவை ஏற்படுத்தும். மகான்களின் தரிசனம் கிடைக்கும். எடுத்த [illegible] திருப்தி தரும்.

**கும்பம்:** [illegible] நிதானத்தை இழந்து [illegible] உங்கள் மீது பழிவாக்க [illegible] லுக்குத் தூண்டு பவரைப் [illegible] ங்கள். மூத்தவர்களின் உ[illegible]த்தில் கவனம் செலுத்[illegible]

**மீனம்:** [illegible] வகையில் நல் [illegible] இன்று நிகழும் [illegible] தரக்கூடிய [illegible] நிம்மதி அடைவீர்கள் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

**சிகை அலங்கரிப்பு**
நிலையத்திற்கு அனுவமிக்க
வேலையாள்கள் (ஆண்கள்) தேவை.
தொடர்பு: **076 280 6356**

## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் Hotel Rolex உணவகத்திற்கு பின்வரும் வேலை யாட்கள் தேவை.
1. சமையல் உதவியாளர்
2. உணவு பரிமாறுபவர்
3. பார்சல் கட்டுபவர்
4. துப்புரவு பணியாளர்
5. காசாளர் (இருபாலாரும் தேவை)

**077 8461 024**
**077 8096 859**

## குத்தகைக்கு

அறுகுவெளி (உலங்கேணி) தனாங்கிளப்பு தென்னை மரங்களுடன் கூடிய நிலப்பரப்பு 76- குத்தகைக்கு விடப்படவுள்ளது. கோழிப்பண்ணை அல்லது கால் நடை வளர்க்க விரும்புபவர்களுக்கு ஏற்ற இடம். வீடும் உள்ளது.
தொடர்பு இலக்கம்: **077 9927 435, 077 4232 638**

## கணக்கு உதவியாளர் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு Accountant and கணக்கு உதவியாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப் படும்.
தொடர்புகளுக்கு:
**074 0049 933**
(CS 18364) 1-6

# சயன்ஸ் அக்கடமி

நல்லூர். முருகன் ஆலயம் முன்பாக — நாவலர் வீதி. அரியாலை.
தொ.பே : 077 538 8471, 077 312 6807, 021 222 9016
**தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற்தர நிறுவனம்**

## புதிய கல்வியாண்டு - 2022

| தரம் 1 முதல் தரம் 5 வரை | தரம் 6 முதல் O/L வரை |
|---|---|
| வாராந்தம் வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப் பிரிவு | தமிழ்மொழி மூல வகுப்புகள் & English Medium Classes |

இவற்றுடன் ICT, ENGLISH LITERATURE, சிங்களம் ஆகிய பாடங்களும் !
இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று சாதனை படையுங்கள் !
**ஆரம்பம் - 07.02.2022 திங்கட்கிழமை மாலை 3.00 மணி**
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சட்ட ஆலோசனை வழங்குநர்களை பதிவு செய்தல் தொடர்பானது

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினது நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளிற்கு சபையினது அலுவலக சட்டத்தரணியாக செயற்படு தல் மற்றும் சபைக்கு அவ்வப்போது தேவைப்படும் சட்ட ஆலோசனைகளினை எழுத்துமூலம் வழங்குவதன் பொருட்டு சபையினால் சட்ட ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நியந்தனைகள்:**

- யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் அலுவலக வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும். சபையின் அலுவலக சட்ட விடயங்கள் தொடர்பில் தேவைப்படும் பட்சத்தில் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.
- குறைந்தது 05 வருடங்கள் சட்டத்தரணியாகவும் பிரசித்த நொத்தாரிசு ஆகவும் பணியாற்றியிருத்தல் வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஆலோசனை விடயத்தில் குறைந்தது 02 வருட முன் அனுபவம் முன்னுரிமையாக கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் இச்சேவையினை வழங்க விரும்பினால் அதற்கான படிவக்கட்டணம் 1000.00 இனை தலைமை அலுவலகத்தில் செலுத்தி அதற்கான விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி தேவைப்படும் ஆவணங்களின் நகல் பிரதியினை இணைப்பதுடன். உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சகல சட்ட ஆலோசனை விடயங்களிற்கான கொடுப்பனவு விபரத்தினையும் இணைத்து 21.02.2022 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்பாகவோ கடித உறையின் இடது பக்க மூலையில் **"சட்ட ஆலோசனை வழங்குநர்களை பதிவு செய்தலுக்கான விண்ணப்பம்"** என குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் **"தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்"** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
மேலதிக விபரங்களுக்கு 021 205 8867 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தியாகராஜா நிரோகஷ்**
**தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**04.02.2022**
(cr.37499) (2.6)




# இனுவில் திருவருள்மிகு
# ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய

## புனராவர்த்தன அஷ்டபந்தன நிகமொக்த நவகுண்டபக்ஷ
## மஹாயாக கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

## திருமுழுக்குத் திருமுகம் - 06.02.2022

பிலவ வருடம் தை மாதம் 14ம் திகதி 27.01.2022 வியாழக்கிழமை காலை 9.36 மணிக்கு கும்பாபிஷேக கிரியாரம்பம்

**எண்ணெய்காப்பு:** 03.02.2022 வியாழன் பகல் 12.00 மணிமுதல் 04.02.2022 வெள்ளி இரவு 10.00 மணிவரை.

06.02.2022 காலை 8 மணிக்கு மேல் 8.45 இற்குள் வரும் கும்பலக்கினத்தில் ஸ்தூபிகள் கும்பாபிஷேகம் தொடர்ந்து பிரதான கும்பங்கள் [illegible] மேல் 10.26 மணிக்குள் வரும் மீனலக்கின சுப முகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம்.

விநாயகர் அடியார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றப் பரிந்துரையை அவமதித்தது பாடசாலை

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கண்டனம்

**திருமலை, பெப். 4**

**திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி ஆசிரியையை கடமையேற்க விடாது தடுத்து நிறுத்தியமை, நீதிமன்ற நியாய ஆதிக்கத்தின் மீது விடுக்கப்படுகின்ற சவாலாகும் -என்று இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; 2018ஆம் ஆண்டு ஹபாயா அணிந்து சென்றதன் காரணமாக வெளியேற்றப்பட்ட ஆசிரியை, நீதிமன்றில் இருதரப்புக்குமிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் மீண்டும் பாடசாலைக்குக் கடமை யேற்கச் சென்றுள்ளார். பாடசாலைக்குள் கூடியிருந்த தரப்பினர் சிலர் அலுவலகத்துக்குள் நுழைந்து ஆசிரியையை கடமையேற்க விடாது தடுத்துள்ளனர். தகாத வார்த்தைகள் கூறி இம்சித்தும் உள்ளனர். ஏற்கனவே மனித உரிமை ஆணைக்குழுவில் ஆசிரியை செய்த முறைப்பாட்டு அறிக்கை மேன்முறையீட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் நீதிமன்றம் ஆசிரியையின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது எனத் தெரிவித்து ஆசிரியையை மீண்டும் பாடசாலைக்குச் செல்ல அனுமதித்தது. இந்த விவகாரம் சட்டமா அதிபரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது. நீதிமன்றை அவமதித்து அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். எனவே பாதிக்கப்பட்ட ஆசிரியைக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் -என்றுள்ளது.

(ம-4-இ)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தைமேனி 30 பரப்புக் காணி பத்து பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
1 பரப்பின் விலை - 320,000/=
15 அடி பாதையுடன் அச்சுவேலியிலிருந்து பலாலி செல்லும் வீதியில் தோலகட்டி கொம்பனிக்கு முன் வீதி. (அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 2 km தூரம்

**076 890 9259, 077 015 0353**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், நுணாவில் வைரவர் கோயில் சந்தியில் மட்டுவில் செல்லும் பிரதான வீதி முகப்புடன் 16 பரப்புக்காணி (நிலப்பரப்பு) இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
**A9 வீதியிலிருந்து 150m தூரம்**

**077 2880 152, 077 911 6983, 0766583621**

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பொருட்கள் பெற்றுக்கொள்ளலாம்.**

பிளாஸ்டிக் பொருட்கள், சில்வர் வகைகள், பாட்டா வகைகள், தையல் உபகரணங்கள், நவீன பட்டின்கள், பொம்மை வகைகள், மாஸ்க் வகைகள், சனிரேசர் வகைகள், விளையாட்டு பொருட்கள், கவரிங் நகைகள், அன்புளிப்பு பொருட்கள் இவை அனைத்தும் கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**26/1, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 468 3354**

**உரிமையாளர்**
**தே.கலைத்தாசன் (கரன்)**
**சரவணபவன் பான்சி கவுஸ்**


வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில்

## கூரையைப் பிரித்து நகைகள் திருட்டு!

யாழ்ப்பாணம், பெப். 4

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், வீட்டின் கூரையைப் பிரித்து நகைகள் திருடப்பட்டுள்ளது. இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ம-125)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி றோட் புன்னாலை கட்டுவன் சந்தியிலிருந்து புத்தூர் செல்லும் பிரதான வீதியில் இரண்டாவது காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 30 பரப்பு விற்பனைக்கு. புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 KM தூரம். நல்ல சூழல்.
1 பரப்பின் விலை 10 இலட்சம், ஒன்பது இலட்சம், எட்டு இலட்சம்.

**தொடர்பு: 077 6234 204**

## வெளிநாட்டில் உடன் வேலைவாய்ப்புக்கள்

## அபுதாபி, துபாய் நாட்டில் உடன் வேலைவாய்ப்புக்கள்

**விசா டிக்கட் இலவசம்**

எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் வேலைவாய்ப்பு
பெற்றோல் நிரப்பும் வேலை
வாகனங்கள் oil மாற்றும் வேலை
சம்பளம் - 2425 திர்ஹாம்

தகைமைகள்
O/L குறைந்தது மூன்று பாடங்கள்
வயது 21-45
ஓரளவு ஆங்கில அறிவு

உடனடியாக உங்கள் தகவல்களை WhatsApp க்கு அனுப்பி விடவும்:
**0777 22 82 31**
தேவையானவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்
1 United Arab Emirates Dirham equals
55.15 Sri Lankan Rupees.


## மைத்துனர்கள் மீது கத்திக்குத்து

### சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 4

அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரப் பகுதியில் குடும்பத்தகராறு காரணமாக மைத்துனர்கள் மீது கத்திக்குத்து நடத்திய சந்தேகநபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

மைத்துனர்களுக்கு இடையிலான வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியுள்ளது. இதையடுத்தே சந்தேகநபர் கத்திக்குத்து நடத்தியுள்ளார். கத்திக்குத்துக்கு உள்ளானவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 04.06.1925 மறைவு : 16.01.2021


அமரர்
**கனகரத்தினம் தங்கேஸ்வரி**

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிகு நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம்மிதயத் தெய்வமே!
ஆண்டொன்று ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம்...

நினைவுகளுடன்...
குடும்பத்தினர்.

(CR 7223)1-6

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
**நல்லம்மா கந்தையா**
(பவளம்மா)

திதி: திருதியை (04.02.2022)

மண்ணில் 15.06.1938 — விண்ணில் 15.01.2021

அன்பின் திருவுருவாய் பாசத்தின்
- உறைவிடமாய்
அமைதியின் சிகரமாய் - எமக்கு வழிகாட்டிய
எங்கள் அன்பின் அம்மா!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அன்பாய் அழைப்பதற்கு நீங்கள் இல்லையே
ஆண்டொன்று கடந்தாலும் அம்மா!! எம்
ஆயுள் உள்ளவரை நினைவுகள் நீங்காது

**கணவர், பிள்ளைகள்,**

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 - 09 - 1967
மறைவு 03 - 02 - 2022

## பரஞ்சோதி செல்வதி (குட்டி)

சங்கத்தானை சாரதாவீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் பெருங்குளம் சந்தி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பரஞ்சோதி செல்வதி நேற்று (03.02.2022) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் நாகமுத்து - கனகம்மா தம்பதியரின் மகளும், பரஞ்சோதி அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பாலாம்பிகை தம்பதியரின் மருமகளும், சர்மிளா, சிந்துஜா, அனுஷா, காலஞ்சென்ற டிலக்சனா, செந்தூரன் ஆகியோரின் தாயாரும், பாலகுமார், பிரசாந், தயா, தயாபரன், ஆனந்தன், கல்பனா ஆகியோரின் மாமியாரும், அலக்ஷிகா, யதுர்ஷா, மாகினி, திபிஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, சாவகச்சேரி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 844 1075
076 564 6328

(எ37504) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு

மன்னார், பெப். 4

இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் மன்னார், புதுக்குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக குறித்த நபர் வீட்டைவிட்டு வெளியேறியிருந்த நிலையில், குறித்தநபரின்சடலம் தூக்கிலிருந்து மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-460)


## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை சிவகுமாரன்

(ஓய்வுபெற்ற வங்கியாளர்)

தோற்றம் : 20.10.1955 மறைவு : 02.02.2022



அம்பன் குடத்தனையைப் பிறப்பிடமாகவும், வதிரி-கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சிவகுமாரன் நேற்றுமுன்தினம் (02.02.2022) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியரின் மூத்தமகனும், கோவிந்தராசா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், உமா அவர்களின் அன்புக்கணவரும், விஜயகுமாரன் அவர்களின் பாசமிகு சகோதரனும், அருண்சங்கர் (லண்டன்), விந்தியா, காலஞ்சென்ற சரண்யா மற்றும் சுகன்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபிதா (லண்டன்), பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், உமா, நடேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், இந்திரலிங்கம் அவர்களின் சகலனும், ஆத்விக் (லண்டன்), அஜீரா (லண்டன்), குருபரன், குருசரன் ஆகியோரின் அன்புப் பேரனும், வேணுகாந்தன், சூரியகாந்தன், வாணி, கவி, நிதர்சன் (கொழும்பு), நிசாந்தன் (கொழும்பு) ஆகியோரின் பெரிய தந்தை யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்பியோடை,
வதிரி, கரவெட்டி.

(cs.18204) (2.6)

தகவல்: குடும்பத்தினர்.
071 860 9741
077 881 0061

## விண்ணக வாழ்வில் 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 16 . 12 . 1947



இறப்பு 05 . 01 . 2022

### அமரர் திரு. மைக்கல் அன்ரனி

எல்லாம் வல்ல இறைவனாகிய தந்தையே
மண்ணக வாழ்வில் இருந்து விண்ணக வாழ்விற்கு
அழைத்துக்கொண்ட உமது அடியாராகிய

திரு. மைக்கல் அன்ரனியின் ஆத்ம இளைப்பாற்றிக்காக இன்று (04.02.2022) வெள்ளிக்கிழமை காலை - 5.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக வேண்டும்படியும் நாளை (05.02.2022) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

56/16, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(cs.18356) 92.6)

அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 . 07 . 1950



மறைவு 15 . 02 . 2021

### அமரர் முருகேசு சபாரத்தினம்

(பிரபல வர்த்தகர், உரிமையாளர் - சபா ரேடர்ஸ்,
யாழ்ப்பாணம்)

திதி:சதுர்த்தி (04.02.2022)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

இல.89, அம்மன் வீதி,
தலங்காவற் பிள்ளையார்
கோவிலடி, திருநெல்வேலி.

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 12 . 1943



மறைவு 03 . 02 . 2022

### திரு.வேலுப்பிள்ளை அம்பலவாணர்

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், 48 ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் விசுவமடுவில் வசித்தவருமான திரு.வேலுப்பிள்ளை அம்பலவாணர் (தருமம்) அவர்கள் நேற்று (03.02.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை அன்னம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா (வைத்தியர்) சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரி (முன்னாள் யாழ்/மாநகர சபை எழுதுவினைஞர்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, இராசரத்தினம், அன்னலட்சுமி, பாக்கியலட்சுமி (மலர், முன்னாள் தபாலதிபர், மண்டைதீவு) மற்றும் நாகலட்சுமி (பூ-கனடா, முன்னாள் தபாலதிபர், மண்டைதீவு), காலஞ்சென்றவர்களான குலசிங்கம் (செல்வம்), இரத்தினசிங்கம் (புண்ணியம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மண்டைதீவு தலைக்கீரி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.48, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
இராசரத்தினம் அறிவரசன்
(சிறிய மகன்)

(CS 18361) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின்

# இருபதாம் ஆண்டு நினைவஞ்சலி



**மண்கும்பானின் மைந்தன்**

## அமரர் ஐயம்பிள்ளை நடராசா
## [மைதில் நகைமாட ஸ்தாபகர்]

திதி: 04.02.2022 (தை மாத வளர்பிறை சதுர்த்தி)

விநாயகர் அருளால் அவதரித்து
எம்மை அரவணைத்து வழிகாட்டிய
நீங்கள் இறைவனடி சென்று
ஆண்டுகள் இருபது ஆனதப்பா!
ஆண்டுகள் பல சென்றாலும்
நினைவுகள் எம் மனதில்
நிழலாக நிற்கின்றன.

ஆயிரம் சொந்தங்கள் அருகினில்
இருந்தாலும் உங்களைப் போல்
அவனியில் யார் வருவார் அப்பா?
நீங்கா நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(cr.37480) (2.6)

மலர்வு 14.04.1947
உதிர்வு 17.01.2002

மைதில் நகைமாடம்,
(தனியார் நிறுவனம்)
89 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7902

யாழ். மைதிலி ஜுவலர்ஸ்,
79 Z, செட்டியார் தெரு.
கொழும்பு.
தொ.பே.: 011 239 6239

# நினைவஞ்சலிகள்

## 6ஆம் மாத நினைவஞ்சலி



பிறப்பு 25 • 11 • 1949
இறப்பு 19 • 08 • 2021

### அமரர் திருமதி சொக்கலிங்கம் சிவதேவி

திதி: துவாதசி

அம்மா நீங்கள் மறைந்து
ஆறுமாதம் ஓடி விட்டது
உங்கள் நினைவுகளால் இப்புவியில்
தினம் தினம் தவிக்கின்றோம்
அம்மா தொலைபேசியில் உங்கள்
குரல் கேட்காதா? என உளம் ஏங்குகின்றோம்
அம்மா நாங்கள் உங்கள் காலடியில் வருமுன்பு
விண்ணகம் சென்றதேனோ
அம்மா நினைத்து நினைத்து
மனம் உருகுகின்றோம் தாயே!
உங்கள் நினைவுகள் எம்முடனே
தங்கள் ஆத்ம சாந்திக்காக காரைநகர்
கருங்காளி போசுட்டி முருகனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தங்கள் பிரிவால் வாடும்
**மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 16 • 12 • 1942
விண்ணில் 28 • 01 • 2019

### அமரர் ஆறுமுகம் சொக்கலிங்கம்

திதி: நவமி

அப்பா எம் அருமைத் தந்தையே
ஆண்டுகள் மூன்று ஆகிவிட்டது
நீங்கள் இப்புவி நீத்த போதும்
உங்கள் நினைவுகளில் நாங்கள்
வாழுகின்றோம் வாடுகின்றோம்.
ஏனிந்த அவசரம் அப்பா.
அழைத்து விட்டீர்கள் அம்மாவையும் தவிக்கின்றோம்.
உங்கள் நினைவுகள் எம்முடனே
தங்கள் ஆத்ம சாந்திக்காக காரைநகர்
கருங்காளி போசுட்டி முருகனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தங்கள் பிரிவால் வாடும்
**மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

(cs.42640) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்கள்...

இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வை முன்னிட்டு. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளின் தூதுவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் சார்பில் அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜனவரி 31 ஆம் திகதி அனுப்பப்பட்ட இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

46/1 தீர்மானத்தின் ஏற்பாடுகளுக்கமைய மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரால் மேற்கொள்ளப்படும் எழுத்துமூல விளக்கத்துக்குப் பின்னர் . இலங்கையின் நிலைமை ஆராயப்படும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் (U.N.H.R.C) 49 ஆவது கூட்டத் தொடருக்கான ஒரு முன்னோடியாக இலங்கை நாடாளுமன்றத்திலிருக்கும் மிகப் பெரிய தமிழ் அரசியல் கட்சியின் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) தலைவர் என்ற வகையில் நான் இதனை உங்களுக்கு எழுதுகின்றேன்.

2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் ஆயுதம் தாங்கிய இன மோதல் முடிவுற்ற ஒரு வாரத்தினுள் . 2009 மே 23 ஆம் திகதி ஐ.நா. செயலாளர் நாயகத்தின் இலங்கைக்கான விஜயத்தின் முடிவில் இலங்கை அரசாங்கத்தினாலும் ஐக்கிய நாடுகள் சபையினாலும் ஏனைய பல விடயங்களோடு கூடவே பின்வருமாறு கூறும் ஒரு கூட்டறிக்கை விடுக்கப்பட்டது. "சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கும் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளுக்கும் அமைவாக, மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான தனது வலுவான கடப்பாட்டை இலங்கை மீளவலியுறுத்தி யது. சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்களை கையாள்வதற்கான ஒரு பொறுப்புக்கூறல் நடைமுறையின் முக்கியத்து வத்தை செயலாளர் நாயகம் கோடிட்டுக் காட்டினார். அந்தப்பிரச்சினைகளைக் கையாண்டு தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்".

மேற்காணும் கடப்பாடுகளைக் கையாண்டு தீர்ப்பதற்கு எதுவித காத்திரபூர்வமான நடவடிக்கைகளையும் இலங்கை கடந்த பன்னிரெண்டு(12) வருடங்களில் மேற்கொள்ளவில்லை. இதற்கு இடைப்பட்ட காலத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை 2021 மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்தோடு சேர்த்து . இதுவரை ஏழு (7) தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

இதனிடையே இலங்கை பெருமளவுக்கு நடைமுறைப்படுத்தப்படாத பல்வேறு கடப்பாட்டு அறிக்கைகளை விடுத்துள்ளது. பொறுப்புக் கூறல் விடயத்தைக் கையாண்டு தீர்க்காதுவிட்டதற்கு மேலதிகமாக, இலங்கை அரசாங்கமானது, இராணுவமயப்படுத்தல், சிவில் சமூகத்தினர் மற்றும் ஊடகத் துறையினர், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், உயிரிழந்த உறவுகளை நினைவுகூருபவர்கள் ஆகியோரைக் கைது செய்தல், அரசியல் கைதிகளை காலவரையறையற்று தடுத்து வைத்திருத்தல், பல்வேறு அரசாங்க திணைக்களங்களின் செயற்பாடுகள் மூலமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்களை அவர்களின் காணிகளில் மீளக் குடியேற விடாது தடுத்தல், பாரம்பரியக் கூட்டுக் காணி உரிமைகளையும் கால்நடைகளின் மேய்ச்சல்தரை உரிமைகளையும் மறுத்தல், அரசியல் மற்றும் சிவில் சமூகச் செயற்பாடுகளைக் கண்காணித்தலை தீவிரப்படுத்தல் ஆகியன அடங்கலாக இலங்கைத் தமிழர்களை அடக்கி ஒடுக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தையே இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

தமிழ் மக்களை அவர்தம் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து விரட்டியடிப்பதற்கு மேலதிகமாக, தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள், வன விலங்கு பாதுகாப்பு மற்றும் வனப்பாதுகாப்பு எனும் போர்வையில் தற்போது நடைபெற்று வரும் காணிச் சூறையாடல்கள் என்பவை தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற மிகவும் பாரதூரமான ஆபத்தாகும்.

பிரதேச எல்லைகளை மீள் வரையறை செய்தல் மற்றும் எதிர்காலத்தில் தமிழர் பிரச்சினையின் எந்தவொரு தீர்வையும் அர்த்தமற்றதாக்கும் வண்ணம் வரலாற்று ரீதியான தமிழ் பேசும் பகுதிகளில் சிங்களக் குடியேற்றல் நிகழ்ச்சித் திட்டமொன்றில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்த நிச்சயமற்ற நிலைமையில், தமிழ் மக்கள் தமது பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு நாட்டை விட்டுச் சென்று வெளிநாடுகளில் தஞ்சம் அடைகின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடுகள், தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களாகக் கொண்டு,பிரிபடாத ஐக்கிய இலங்கையினுள் வாழ்ந்துவரும் ஒரு மக்கள் குழுமத்தினர் என்று உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எண்ணக்கருவை தோற்கடித்து, அதன்மூலம் வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒரு சிங்கள பெரும்பான்மையின பிரதேசங்களாக முனைப்புடன் மாற்றியமைக்கும் எண்ணம் கொண்டவையாகும்.

46/1 ஆம் இலக்கத் தீர்மானம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடுகள் தொடர்பாக அதன் செயலாற்றுகையை மதிப்பிடுமுகமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கூடுகின்ற போது, மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான தனது கடப்பாடுகளில் இலங்கை அரசாங்கம் தவறிவிட்டதென்பதையும், அம் மீறல்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரே உறுதியான வழியாக தமிழ்த் தேசியப் பிரச்சினையைக் கையாண்டு தீர்ப்பதற்கு அது எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்பதையும் தெளிவாக எடுத்துரைக்குமாறு உறுப்பு நாடுகளை நான் வலியுறுத்துகிறேன்.

கலந்துரையாடல் தொடர்களில், உங்கள் கருத்துக்களை முன்வைத்து, பொறுப்புக் கூறல் மற்றும் தமிழர் தேசிய பிரச்சினையைத் தீர்த்துவைத்தல் ஆகியன தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடுகளுக்கு இயைந்தொழுகுமாறு அதனை வலியுறுத்துமாறும், இலங்கையில் உள்ள தமிழ் மக்களாகிய நாங்கள் ஒரு ஐக்கிய மற்றும் பிரிபடாத இலங்கைக்குள் எமது வரலாற்றுரீதியான வாழ்விடப் பிரதேசமாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுயமரியாதையோடும் கண்ணியத்தோடும் பாதுகாப்புடனும் வாழ்வதை உறுதிப்படுத்துமுகமாக இலங்கை அரசாங்கத்தை அதன் அனைத்து வாக்குறுதிகளுக்கும் அமைவாக சரியான திசையில் நகர்வதற்கு தூண்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தமிழ் மக்கள் உங்களைக் கேட்டுக்கொள்கின்றனர் என்றுள்ளது. (அ-1)

## முள்ளிவாய்க்காலில்...

யில், இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழர்களின் கறுப்புநாளாக அனுஷ்டிக்கும் மாபெரும் போராட்டம் முள்ளி வாய்க்காலில் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. வடக்கு,கிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் மற்றும் வடக்கு,கிழக்கு சிவில் சமூகங்களின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்த மாபெரும் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூக அமைப்புகள், பொது நிறுவனப் பிரதிநிதிகள், சமூக உரிமைச் செயற்பாட்டாளர்கள், மதகுருமார், அரசியல்வாதிகள், பொதுமக்கள் என அனைவரும் அணிதிரளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-1)

## தேசிய...

பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பு, பொரளைப் பகுதியிலுள்ள தேவாலயமொன்றிலிருந்து கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ மேலும் கூறியவை வருமாறு,

" அரசால் அதிகாரபூர்வமாக நாளை (இன்று) நடத்தப்படும் தேசிய சுதந்திர தின நிகழ்வில் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கலந்துகொள்ளமாட்டார். சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் விசேட ஆராதனையும் இம்முறை இடம்பெறாது. தேவாலயத்திலிருந்து கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பேராயர் கவலையில் இருக்கின்றார். முறையான விசாரணை இடம்பெறவில்லை எனவும் கருதுகின்றார். அப்பாவிகள் தண்டிக்கப்படுவது தவறு. தேவாலயத்தில் இருந்த ஒருவர் காரணமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதி கோரி நாம் நிச்சயம் சர்வதேசம் செல்வோம். வத்திக்கானுக்கும் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளகப் பொறிமுறையால் உரிய விசாரணை நடக்காத சூழ்நிலையே காணப்படுகின்றது. அதனால்தான் மாற்றுவழியை நாடியுள்ளோம்." -என்றார். (அ-44)

## பயங்கரவாதத்....

தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதை எதிர்த்து . சுதந்திரம் மறுதலிக்கப்படுவதை வெளிக்கொணரும் வகையில் குருந்தூர்மலையில் தடையை மீறி உள்நுழைவுப் போராட்டமும் நடத்தப்படவுள்ளது. இது குறித்து தமிழரசுக் கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இலங்கையின் சுதந்திர தினமென்பது, ஆரம்பத்திலிருந்தே நாட்டில் எண்ணிக்கையில் பெரும்பான்மையினராக வாழ்வோருக்கு உரித்தானதாக மட்டுமே இருந்து வருகிறது. பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் கூடுதலான எண்ணிக்கையை பிரயோகித்து இந்த நாட்டிலே வாழும் மற்றைய மக்களை சம பிரஜைகளாக கணிக்காமல் அவர்களது அடிப்படை உரிமைகள் எல்லாம் படிப்படியாக பறிக்கப்பட்டிருக்கின்றன. தற்போது நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களின் மரபுவழித் தாயகத்தை படிப்படியாக அபகரிக்கின்ற செயற்பாடு துரிதப்படுத்தப்பட்டிருக்கிறது.

நேரடியான சிங்களக் குடியேற்றங்களுக்கு மேலதிகமாக, தமிழ் வாழ்விடங்களில் தொல்லியல், வனவள பாதுகாப்பு, வன ஜீவராசிகள் மற்றும் மகாவலி என்கின்ற போர்வையில் எமது மக்களுடைய நிலங்கள் வாழ்வாதாரங்களுடன், அவர்களது வழிபாட்டு உரிமைகளும் பறிக்கப்படுகின்றன.

மேற்சொன்ன நில அபகரிப்பு நடவடிக்கைகளுக்கும் உரிமை மறுப்புக்களுக்கும் எதிர்ப்பைத் தெரிவிக்குமுகமாக நாளைய தினம் (இன்று) அதாவது, தனது 75 வது சுதந்திர வருடத்துக்குள் நுழைவதை கொண்டாடுகிற அதே வேளையில் எமக்கான சுதந்திரம் மறுக்கப்பட்டிருப்பதை வெளிக்கொணரும் வண்ணமாக அண்மையில் குருந்தூர் மலையில் வழிபாட்டு சுதந்திரத்தை மறுத்திருக்கிற ஸ்தலத்துக்கு தடைகளை மீறிச் செல்ல உத்தேசித்துள்ளோம். நாளை (இன்று) அதாவது. 2022 பெப்ரவரி 4 ஆம் திகதி காலை 6 மணிக்கு அனைவரும் குருந்தூர் மலையடிவாரத்துக்கு வந்து சேருமாறு அழைப்பு விடுக்கிறோம். 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டமே (தற்காலிக) எமது சட்டப்புத்தகங்களில் காணப்படும் மிகக் கொடூரமான சட்டமாக தற்போதும் காணப்படுகிறது. 1979 ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாக நிறை வேற்றப்பட்ட இந்தச்சட்டம், அதன் தலைப்பில் தெரிவிப்பது போல, (தற்காலிக) 6 மாத காலத்துக்கு மட்டும் செல்லுபடியாக வேண்டியது. ஆனால் 42 வருடகாலங்கள் நீடித்து, அநீதியை விளைவித்தும் அநேகருக்கு துன்பத்தையும், கஷ்டங்களையுமே வழங்கியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாக சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு அமைவாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இலங்கை உறுதியளித்திருந்தது. 2018 இல் ஒரு சட்டவரைவு அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அரசால் கிடப்பில் போடப்பட்டது, இருப்பினும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை திருத்துவதாக உறுதியளித்த இந்த அரசு, தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை 'சீர்திருத்தம்' செய்வதற்காக 2022 ஜனவரி 27 ஆம் திகதி அதன் திருத்தத்துக்கான சட்டவரைவை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முன்மொழியப்பட்ட திருத்தம் நடைமுறையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் அமுலாக்கலிலும் அதைத் தொடர்ந்து வரும் கடுமையான விளைவுகளிலும் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாது. இந்தப் பின்னணியில் நாம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குவதாக தாம் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்று வதற்கு இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென்று வலியுறுத்துமாறு சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

இவ்வேண்டுகோளை வலியுறுத்தி கையெழுத்துக்களை சேகரிக்கும் பெரும் போராட்டமொன்றை சகல மாவட்டங்களிலும் இன்றிலிருந்து ( நேற்றிலிருந்து) ஆரம்பிக்கிறோம். எமது மக்கள் பெரும் எண்ணிக்கையாக கையெழுத்துக்களை கொடுத்து உதவுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்- என்றுள்ளது. (அ-1)

## நேற்றும்...

பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். நேற்றுப் பகல் வேளையில் இருந்தே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு , வவுனியா, கொழும்பு உள்ளிட்ட நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் குறித்த சில மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்பட்டது. இந்த மின் தடை குறித்து எவ்வித முன்னறிவித்தலும் விடப்படாமையால் பொதுமக்களும், தொழிற்சாலைகளும், நிறுவனங்களும் பெரும் இடையூறை எதிர்கொண்டனர்.

மின் உற்பத்தி நிலையங்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இவ்வாறு மின் தடை ஏற்பட்டதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயினும் 'இந்த மின்வெட்டுக்கான அனுமதியை எம்மிடம் மின்சாரசபை கோரவில்லை. அவ்வாறு அனுமதியின்றி மின்வெட்டு நடவடிக்கையில் மின்சாரசபை ஈடுபட்டால் சட்டவிதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்' என்று பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ-1)

## மாவைக்கு...

மான மாவை சேனாதிராசாவுக்குக் கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாவை சுகவீனமுற்றிருந்த நிலையில், திருநெல்வேலியில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே அவருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்கும்பானின் மைந்தன்

அமரர்

## ஐயம்பிள்ளை நடராசா

(உரிமையாளர்
நியூ மைதிலி ஜுவலர்ஸ், சந்தோஷ் ஜுவலர்ஸ்)

மலர்வு
14.04.1947

உதிர்வு
17.01.2002

திதி: 04.02.2022 (தை மாத வளர்பிறை சதுர்த்தி)






**அன்புள்ள அப்பா!**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப்பிரிந்து
ஆண்டு இருபது ஆனது ஐயா!
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.




**அன்னாரின் நினைவையொட்டி**
**இன்று (04.02.2022) வெள்ளிக்கிழமை**
**இல 47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி**
**வடக்கில் அமைந்துள்ள வலுவிழந்தோர்**
**புனர்வாழ்வு நிலையத்திற்கு உணவு**
**வழங்கப்படுகின்றது.**

நடராசா கஜந்தன்
**நியூ மைதிலி ஜுவலர்ஸ்**
இல. 38,40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 7878 / 021 221 7877

நடராசா கஜந்தன்
**சந்தோஷ் ஜுவலர்ஸ்**
இல. 97A,99V, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 1177 / 021 221 1188

என்றும் நினைவுடன் வாழும்:
**குடும்பத்தினர்,**
**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(cc.37481) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
20.03.1944

மறைவு
05.01.2022

## அமரர் திரு. கணபதிப்பிள்ளை செல்லத்துரை

(உரிமையாளர் சோதிரெக்ஸ், விஷ்ணு ஹாட்வெயார் – ஆவரங்கால், புன்னாலைக்கட்டுவன்)

**திதி: பூர்வபக்க திருதியை**

எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (04.02.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எம் அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும், மலர் வளையங்கள், பதாகைகள் சாத்தியும் அஞ்சலி செலுத்திய எம் அன்புக்குரிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் அன்னாரின் இறுதி யாத்திரையில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிக் காணிக்கைகளை சமர்ப்பிக்கின்றோம்.

(CR 37495) (3/6)

**குடும்பத்தினர்**
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.